**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.95/2022**

**Deposition of Witness for : P.W.4**

**Name :** திரு.சக்தியானந்தன்

**Father's Name :**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 8.11.2023.**

முதல் விசாரணை -

நான் விளை கிராமத்தில் வசிக்கிறேன். ரைஸ்மில்லில் வேலை செய்கிறேன். புருஷோத்தமன் என்னுடைய எதிர்வீடு. ஆஜர் எதிரி புருஷோத்தமனின் தம்பி. புருஷோத்தமன் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். 19.10.2021 அன்று போலிசார் என்னை விசாரணை செய்தபோது, 19.10.2021 அன்று இரவு 12 மணி அளவில் அவர் தீக்காயத்துடன் கீழே விழுந்து கிடந்திருந்தார்.

எங்கு விழுந்து கிடந்தார் என்றால் புருஷோத்தமன் வீட்டிற்கு பக்கத்து மனையில் விழுந்து கிடந்தார். விழுந்து இருந்ததை குறித்து பச்சையம்மாள் தான் என்னிடம் வந்து புருஷோத்தமன் தீக்காயங்கள் உடன் மேலிருந்து கீழே விழுந்து இருப்பார் போல உள்ளது அவர் தீக்காயத்துடன் கீழே விழுந்துள்ளார் என்று வந்து என்னை எழுப்பினார். அதன்பிறகு புருஷோத்தமனின் அக்காவிற்கு தகவல் சொல்லி ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டார் என போலிசார் விசாரணையில் சொன்னேன்.

என்னை நீதித்துறை நடுவரிடம் அழைத்துச் சென்று வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரி தான். இங்கு சொன்னவாறு தான் அங்கும் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள கையொப்பங்கள் அனைத்தும் என்னுடையது தான். 164 குவிமுச வாக்குமூலத்தில் உள்ள <u>கையொப்பங்கள் அனைத்தும் அ.சா.ஆ.1</u>.

மேற்படி கையொப்பங்கள் நான் நீதித்துறை நடுவர் அவர்களிடம் கொடுத்ததற்காக போட்டவை தான் என்றால் சரி தான். நான் சொன்னவற்றை தான் நீதித்துறை நடுவர் அவர்கள் பதிவு செய்தார் என்றால் சரி தான்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் வீட்டில் படுத்துக்கொண்டிருக்கும்போது பச்சையம்மாள் வந்து எழுப்பினார் என்றால் சரி தான். அதற்கு முன்பு வரை என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரி தான். பச்சையம்மாள் ஓடி வாங்கள், ஓடி வாங்கள் என்று தான் அழைத்தாரே தவிர வேறு எதுவும் சொல்லவில்லை என்றால் சரி தான். தீக்காயத்துடன் மேலிருந்து விழுந்திருப்பார் போல் உள்ளது என்று குறிப்பிட்டு சொன்னாரா என்றால் தீக்காயத்துடன் கீழே

இருந்ததை மட்டும் குறித்து சொல்லியுள்ளார்.

நான் போகும்போது புருஷோத்தமன் மூச்சு பேச்சு இல்லாமல் மயக்க நிலையில் இருந்தார் என்றால் சரி தான். நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு எந்த தேதியில் சென்றேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் தான் என்னை நீதித்துறை நடுவரிடம் அழைத்துச் சென்றார்கள் என்றால் சரி தான். போலிசார் நீதித்துறை நடுவரிடம் எவ்வாறு சொல்லவேண்டும் என்று சொன்னார்கள் என்றால் நடந்ததை சொன்னேன்.

நீதித்துறை நடுவரிடம் பச்சையம்மாள் தீயை எல்லாம் அணைத்துவிட்ட பிறகு தான் எங்களை அழைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரி தான். ராஜசேகர் புருஷோத்தமனை பெட்ரோல் ஊற்றி கொளுத்தியதாக பச்சையம்மாள் என்னிடம் கூறியதாக நீதித்துறை நடுவரிடம் நான் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. நான் புருஷோத்தமனை அருகே சென்று பார்க்கவும் இல்லை, அவர் என்னிடம் பேசவும் இல்லை என்றால் சரி தான். போலிசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் நீதித்துறை நடுவர் அவர்களிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.

Additional Sessions Judge,

Arani.